முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.11.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சந்தித்து, புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற 43வது இந்திய, பன்னாட்டு வர்த்தக கண்காட்சியின் "2047ல் இந்தியா" என்ற கருப்பொருள் விளக்கக் காட்சிப்படுத்தலை சிறப்பாக அமைத்ததற்காக தமிழ்நாடு மாநில அரங்கிற்கு வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

பிறந்த நாள் காணும் கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் தயாநிதிமாறன் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் உரிமைகள் - நலன்களுக்காக

நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்களின் குரல்!

சரமாரி கேள்வி!

புதுடெல்லி, நவ.30-

தமிழ்நாட்டின் உரிமைகள் மற்றும் நலன்களுக்காக நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்கள் நேற்று (29.11.2024 - வெள்ளிக்கிழமை) சரமாரி கேள்விகளை எழுப்பினர்.

இதுபற்றிய விவரம் வருமாறு :-

1. மருத்துவர்களுக்கு எதிரான வன்முறையை தடுத்திடுக!

திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி கோரிக்கை

நாட்டில் மருத்துவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. கடந்த பத்தாண்டுகளாக நடந்த சம்பவங்களை கணக்கெடுத்து, ஆய்வுகளின் அடிப்படையில் வன்முறைகளை தடுக்கும் வகையிலும் மருத்துவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும்விதமாகவும் ஒன்றிய அரசு தனிச்சட்டம் இயற்றிடவேண்டும், அரசு மற்றும் தனியார் மருத்துவத் தொழிலில் ஈடுப்படுள்ள அனைவரின் பாதுகாப்பையும் அரசு உறுதிசெய்ய வேண்டும் என்றும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் இன்று ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளார்.

2. குழந்தை திருமணமுறையை முற்றிலும் ஒழிக்கவேண்டும்!

திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி கோரிக்கை

உலக அளவில் நடக்கும் குழந்தை திருமணங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் நடைபெறுகிறது என்று சமீபத்தில் ஐ.நா. வெளியிட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி குழந்தை திருமணமுறையை முற்றிலும் ஒழிப்பதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்மீது திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டிருப்பது பின்வருமாறு:

கடந்த மூன்று ஆண்டுகளில் குழந்தை திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையை மாநில வாரியாக, மாவட்ட வாரியாக கணக்கெடுக்க வேண்டும்.

கிராமப்புறங்களில் குழந்தை திருமணங்களை தடுக்க அரசு எடுத்திருக்கும் புதிய முயற்சிகளின் விவரங்களை மாநிலம் வாரியாக அறிவிக்க வேண்டும்.

அதேபோல் தடுத்து நிறுத்தப்பட்ட குழந்தை திருமணங்கள் குறித்த எண்ணிக்கை விவரம்.

பன்னாட்டு சட்டங்களான பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான கூட்டமைப்பின் (CEDAW) அறிவுறுத்தலின்படி சிறார்களின் நிச்சயதார்த்தங்களை சட்டப்படி குற்றம் என அரசு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

3. இந்தியாசீனா எல்லை பிரச்சினை குறித்து வெள்ளை அறிக்கை வேண்டும்!

திமுக எம்.பி. தயாநிதி மாறன்

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் இந்திய சீன எல்லைகளில் இரு நாடுகளும் தங்களது படைகளை விலக்கிக்கொள்ள ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் விவரங்களை ஒன்றிய அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். மேலும் எல்லை ஒப்பந்தம் குறித்து சீன அரசாங்கத்திடம் இருந்து முறையான அறிக்கை வந்துள்ளதா என்பதையும் தெரியப்படுத்த வேண்டும். மேலும் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் விசா வழங்குவதற்கான விதிகளை எளிதாக்கும் வழிமுறைகளை அரசு உருவாக்கவேண்டும் எனவும் இன்று மக்களவையில் திமுக எம்.பி. திரு. தயாநிதி மாறன் கேட்டுள்ளார்.

4. தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை உடனடியாக விடுவிக்கவேண்டும்!

திமுக எம்.பி. பி.வில்சன்

சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைப்பதன் மூலம் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மாநில அரசை நிர்பந்திக்கூடாது மற்றும் தமிழ்நாடு அனுப்பியிருக்கும் தேசிய கல்விக் கொள்கையை கடைப்பிடிப்பதை கட்டாயப்படுத்தும் விதியை விலக்கும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒன்றிய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திமுக எம்.பி. பி.வில்சன் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இந்திய தேசிய கல்விக் கொள்கை 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த சேர்க்கை விகிதத்தை 50 சதவீதமாக அடைவதை இலக்காக கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாடு இவ்விலக்கை ஏற்கனவே அடைந்துவிட்டதன் காரணமாக மாநில அரசுகள் தனது சொந்த கல்விக் கொள்கையை உருவாக்க ஒன்றிய அரசு அதிகாரம் அளிக்க வேண்டும் என்றும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

5. நீதித்துறையில் சமூக பன்முகத் தன்மை இல்லாதது ஏன்?

திமுக எம்.பி. வில்சன்

உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களில் சமூக பன்முகத்தன்மை/இட ஒதுக்கீடுகள் தேவை என்பதை தனது முன்மொழியப் பட்ட நடைமுறை குறிப்பில் அரசு சேர்த்திருக்கிறதா என்று திமுகவின் மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் அவர் கேட்டிருப்பதாவது :

அனைத்து உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் பணிபுரியும் எஸ்சி, எஸ்டி, ஓபிசி, முன்னேறிய வகுப்பினர், பெண்கள் மற்றும் சிறுபான்மை பிரிவு நீதிபதிகளின் 31.10.2024 அன்று வரையிலான எண்ணிக்கை விவரங்களை வெளியிடவேண்டும்.

17.01.2023 அன்று உச்ச நீதிமன்ற கொலீஜியம் பரிந்துரைத்த போதிலும் ராமசாமி நீலகண்டன் மற்றும் ஜான் சத்தியம் ஆகியோரின் பெயர்கள் நிலுவையில் உள்ளதன் காரணங்களை வெளியிட வேண்டும்.

31.10.2024 காலம்வரையில் அனைத்து உயர் நீதிமன்றங்களிலும் உள்ள மொத்த காலியிடங்களின் விவரங்கள் மற்றும் பணியிலிருக்கும் நீதிபதிகளின் எண்ணிகையையும் அரசு வெளிப்படையாக அறிவிக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் கழக எம்.பி.க்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

பிறந்த நாள் காணும் கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்தார்.

துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அவரது பிறந்த நாளன்று, சென்னை - 'குறிஞ்சி இல்லத்தில்' கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் தி.மு.க. தலைமை நிலைய நிர்வாகி ஆர். பத்மநாபன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் நவ-27ல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம்!

பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் அமைச்சர் தா.மோ அன்பரசன் அணிவித்தார்!

பல்லாவரம் நவ.30- பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளந் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குரோம்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் நவ-27ல் பிறந்த குழந்தைகளுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ ஏற்பாட்டில் காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு தங்க மோதிரம் அணிவித்தார்.

KTDA குவைத் நாட்டில் தமிழ் ஓட்டுநர்கள் சேவை மையம் நடத்திய 3 ஆம் ஆண்டு இலவச மருத்துவ நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காணொளி காட்சி வாயிலாக மருத்துவ முகாமை துவக்கி வைத்து தமிழ் ஓட்டுநர்களிடம் சிறப்பு உரையாற்றினார்

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஜூன் -3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மார்ச் 1 நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா ஆகிய நாட்களில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்து மகிழ்விக்க வைக்கப்படுகிறார்கள் அதேபோல் கடந்த ஆண்டிலிருந்து நமது இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவிற்கும் தங்க மோதிரம் அணிவிக்கப்பட்டது அதேபோல் 29-11-2924 இன்று காலை காலை 10 மணி அளவில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையிலும் ஏற்பாட்டிலும் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்து கொண்டு நவம்பர் 26 அன்று இரவு 12:00 மணியிலிருந்து நவம்பர் 27ஆம் தேதி இரவு 12 மணி வரை பிறந்த 10 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தார் மற்றும் குழந்தைகளுக்கு பயன்படும் சோப்பு பவுடர் டவல் கொண்ட பரிசு பெட்டகம் பழ கூடை ரொட்டி ஆகியவையும் வழங்கப்பட்டன.

மருத்துவமனையில் குழந்தைகள் பெற்று சிகிச்சை பெறும் 40 தாய்மார்களுக்கும் தாய் சேய் பரிசு பெட்டகம் வழங்கப்பட்டன இந்நிகழ்ச்சியில் துணை மேயர் கோ. காமராஜ் மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர்கள் இ.எஸ் பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் பகுதி கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்ட கழகச் செயலாளர் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளான 27.11.2024 அன்று மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் சார்பில் அய்யப்பன் தாங்கல் பணிமனையில் துணைத் தலைவர் எஸ்.பி. கண்ணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் 500 தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தொழில்நுட்ப செயலாளர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நடத்துநர்கள், சங்கத்தின் மூத்த முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலை! சிட்கோ ஜெ.பாலமுருகன் தலைமை!

மனிதநேய உதயநாள்! இறகு பந்து விளையாட்டுப் போட்டி!

அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் - ஜே.ஜே.எபினேசர் துவக்கி வைத்து பரிசு வழங்குகின்றனர்!

சென்னை, நவ.30

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர்அணி சார்பில் மனிதநேய உதய நாளை முன்னிட்டு - இறகு பந்து விளையாட்டுப் போட்டி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் மற்றும் வடசென்னை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் இறகுபந்து விளையாட்டுப் போட்டி துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்-7, இலட்சிய இளைஞர் கூட்டம்! விளையாடி வென்று காட்டும் எனும் தலைப்பில் இறகுபந்து விளையாட்டுப் போட்டி 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில், சென்னை,அண்ணாநகர் மேற்கு, வெல்கம் காலனி, சேட் பாய்ண்ட் பேட்மின்டன் மைதானத்தில் சிட்கோ ஜெ.பாலமுருகன் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிட்கோ ஜெ.பாலமுருகன் தலைமை வகிக்கிறார்.

கழகப்பொருளாளர்-கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகிக்கின்றனர்.

ஜோசப்சாமுவேல்.எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்திஎம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வழக்கறிஞர் பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், டி.லோகேஷ், LPF. மோகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, பாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்சி, டாக்டர்ஜி.சாந்தகுமாரி எம்.சி, வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு எஸ்.தனசேகர், எஸ்.சௌந்தர்ராஜன்(எ) ராஜா, எம்.மணிகண்டன், எ.வ.சாந்தகுமார், டி.புருஷோத்தமன், எஸ்.கே.கோவிந்தன், எஸ்.சந்திரசேகர், எஸ்.வினோத்குமார், எஸ்.சாரதி, எ.முத்துகுமரன், இ.கணேசன், எஸ்.பிரசாந்த்குமார், ஆர்.கலாநிதி, கு.கார்த்திக், JPR.ரகு, லோ.திருநாவுக்கரசு பிரசாந்த் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இவ்விளையாட்டு போட்டியை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் வடசென்னை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் இறகுபந்து விளையாட்டு போட்டி துவக்கி வைத்து பரிசுகள் வழங்குகின்றனர்.

மேலும் இவ்விழாவில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, பி.முனியாண்டி, மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன் எம்.எல்.ஏ., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா பரிதிஇளம்சுருதி/C மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, சரிதாமகேஷ்குமார் எம்.சி ஸ்ரீராமுலு எம்.சி, வே.வாசு ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன் சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: வானவில் விஜய். நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், சுதாதீனதயாளன் எம்.சி, ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி, பி.விஜயகுமார், எம்.பெரோஸ்கான், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, கே.பொற்கொடி எம்.சி எம்.கமல் எம்.சி, அம்பத்தூர் தெற்கு வடக்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: அ.செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமி ரங்கசாமி, இ.ராமு, மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், கவிதாசெல்லதுரை, கு.சங்கர்,அம்பத்தூர் தெற்கு வடக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்:த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், இரா.டீக்கா, வி.ரவீந்திரன் பு.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.இரகு, த.கண்ணபிரான், மு.சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ.லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் நா.நெப்போலியன் நன்றி கூறுகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழு நோயாளிகளுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், மாவட்டக் கழக துணை செயலாளர் து.மூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், ஒன்றியச் செயலாளர் ஆப்பூர் சந்தானம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.